இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 09-08-2023

# யார் தடுத்தது? - 1

எந்த சாதனையையும் செய்யாத பிரதமர் நரேந்திர மோடி இப்போது என்ன சொல்கிறார் தெரியுமா? எந்த நல்லது செய்யவும் அவரை எதிர்க் கட்சிகள் விடவில்லையாம்!

ஆட்சி முடியப் போகும் இந்த நேரத்தில் 508 ரயில் நிலையங்களை இப்போது மறுகட்டமைப்பு செய்யப் போகிறார்களாம். அந்த விழாவில் காணொலி மூலமாகப் பேசியிருக்கிறார் பிரதமர். "நாட்டில் தற்போது எதிர்க்கட்சிகள் எதிர்மறை அரசியலில் ஈடுபட்டு வருகின்றன. சில கட்சிகள் நாட்டுக்காக எதையும் செய்வதில்லை. மற்றவர்களையும் எதுவும் செய்ய விடுவதும் இல்லை" என்று சொல்லி இருக்கிறார். அவர் எந்த நன்மை யைச் செய்ய முன் வந்தார். அதனை எதிர்க்கட்சிகள் தடுத்தன என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா? அதைச் சொல்ல அவரால் முடியவில்லை.

**பிரதமர் ஆவதற்கு முன்னால் கொடுத்த முக்கியமான மூன்று வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அவர் என்ன செய்தார்?**

*** கருப்புப்பணத்தை மீட்பேன், ரூ.15 லட்சம் வரை இந்தியர்கள் பெறலாம்.**

*** விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலையை இரண்டு மடங்கு ஆக்குவேன்.**

*** ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பேன்.**

**-ஆகிய மூன்று முக்கியமான இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டதா? இல்லை என்றால், அதனை நிறைவேற்ற முடியாமல் தடுத்தது எதிர்க்கட்சிகளா?**

**கருப்புப்பணம்:**

"இந்தியாவின் மோசடிப் பேர்வழிகள் கறுப்புப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் டெபாசிட் செய்கிறார்கள். அந்த பணத்தைத் திரும்பக் கொண்டு வந்தால், ஒவ்வொரு ஏழை இந்தியனும் ரூ.15 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரை இலவசமாகப் பெறுவான். பா.ஜ.க. வெற்றி பெற்றால் கறுப்புப் பணத்தை மீட்போம்" என்று பேசினார் அன்றைய நரேந்திர மோடி அவர்கள். **அந்த வாக்குறுதி என்ன ஆச்சு? 'இப்படி சும்மா சொன்னோம்' என்று உள்துறை அமைச்சரே சொல்லி விட்டார்.**

2015 ஆம் ஆண்டு ஏ.பி.பி. ஊடகத்துக்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா அளித்த பேட்டியில், "தேர்தல் தந்திரமாக அப்படிச் சொன்னோம். இது ஒரு உருவகம் தான்" என்று கூறினார். "Modiji's statement was an idiomatic expression (jumla) that was given during the Lok Sabha polls" என்றார் அமித்ஷா. "ரூ.15 லட்சம் தருவதாக நாங்கள் சொன்னது உண்மைதான். ஆனால் அது ஜூம்லா" என்று சொன்னவர் அமித்ஷா. ஜூம்லா என்ற இந்தி/ உருதுச் சொல்லுக்கு பொய்யான வாக்குறுதி, பொய்யான வாக்கியம், வெற்றுச் சொல் என்று பொருள்.

ரூ.15 லட்சம் கொடுக்கவில்லை. இவர்கள் கருப்புப்பணத்தை வெளி நாடுகளில் இருந்து மொத்தமாக மீட்டுக் கொண்டு வந்து விட்டார்களா என்றால் அதுவும் இல்லை.

**விவசாயப் பொருட்கள்:**

"விவசாயிகளின் வருமானம் அனைத்தும் இரண்டு மடங்கு ஆக்குவேன். விவசாயிகள் பற்றி ஆராய எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த அறிக்கையை காங்கிரசு அரசு செயல்படுத்தவில்லை. பா.ஜ.க. ஆட்சி அமைந்ததும் எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கையை அமல்படுத்துவோம். அதிக லாபத்தை ஏற்படுத்திக் கொடுப்பேன்" என்று பிரதமர் சொன்னார். **ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. எதுவும் செய்யவில்லை.**

விவசாயிகளின் தற்கொலைகள் அதிகமாக நடப்பதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து, விவசாயத்தை மேம்படுத்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆணையம் அமைக்கப்பட்டது. விவசாயிகளின் விரக்தி, இறக்குமதி அனுமதிகள், வேளாண் விளை பொருட்களுக்கு சந்தையில் உத்தரவாதம் இல்லாத நிலை, பாசன வசதி, மின்சாரம், கடன்கள், இயற்கைச்சீற்றம், விளைபொருட்களுக்கு கட்டுப்படி விலை இல்லை ஆகிய காரணங்களால் விவசாயிகள் தற்கொலை நடப்பதாக எம்.எஸ். சுவாமிநாதன் அறிக்கை சொன்னது. நிலச்சீர்திருத்தம் செய்ய வேண்டும், கடன் மற்றும் காப்பீட்டை உறுதிப்படுத்த வேண்டும், விவசாயிகளின் தற்கொலைகள் தடுக்கப்பட வேண்டும், விவசாயிகளுக்குள் போட்டித் திறனை அதிகரிக்க வேண்டும் என்று அந்த அறிக்கை சொன்னது.

இந்த அறிக்கையில் மிக முக்கியமானது ஆதார விலை நிர்ணயிக்க வேண்டும் என்பது ஆகும். அதாவது உள்ளீட்டு செலவு, உழைப்புக்கூலி, நிலத்துக்கான வாடகை ஆகியவை கொண்டு முதலில் ஒரு விலையை நிர்ணயிக்க வேண்டும். அந்த தொகையில் 50 சதவிகிதத்தை மேலும் கூட்ட வேண்டும். அதுதான் பொருளுக்கான ஆதாரவிலை என்று சொன்னது சுவாமிநாதன் ஆணையம். இதனைத் தான் தருவோம் என்று 2014 ஆம் ஆண்டுக்கு முன்னால் மோடி சொன்னார். **ஆனால் பிரதமர் ஆன இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் செய்து தந்தாரா இல்லை.**

'எம்.எஸ்.சுவாமிநாதன் ஆணையத்தின் அறிக்கையை அமல்படுத்த வேண்டும்' என்று உச்சநீதிமன்றத்தில் விவசாயிகள் வழக்குப் போட்டார்கள். "சுவாமிநாதன் குழு அறிக்கையை அமல்படுத்துவது சாத்தியமில்லை" என்று 2015 ஆம் ஆண்டு சொன்னதுதான் மோடி அரசு ஆகும்.

**2017 ஆம் ஆண்டு விவசாய அமைச்சராக இருந்த ராதாமோகன்சிங் என்பவர், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கையை அமல்படுத்துவோம் என்று சொல்லவே இல்லை' என்று சொன்னார். 2018 ஆம் ஆண்டு அமைச்சர் அருண்ஜெட்லி என்ன சொன்னார் தெரியுமா? "எம்.எஸ். சுவாமிநாதன்** அறிக்கையை முழுமையாக அமல்படுத்திவிட்டோம். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்" என்று சொன்னார். எம்.எஸ். சுவாமிநாதன் ஆணைய அறிக்கையை அமல்படுத்தாதது மட்டுமல்ல; விவசாயிகளிடம் இருந்து மண்ணையும், விவசாயத்தையும் பறிக்கும் மூன்று வேளாண் சட்டத்தைக் கொண்டு வந்ததும் மோடி அரசு ஆகும்.

தொடரும்

சங்கரன்கோவிலில்

## முத்தமிழறிஞர் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவு நாள்!

சங்கரன்கோவில், ஆக. 9-

தென்காசி தெற்கு மாவட்டம் சங்கரன்கோவில் நகரக் கழகம் சார்பில் சங்கரன்கோவில் சட்டமன்ற அலுவலகம் முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு கலைஞர் அவர்களின் திரு உருவப்படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு சீனிவாசன், பரமகுரு, மாவட்ட அவை தலைவர் பத்மநாபன், துணைச் செயலாளர்கள் ராஜதுரை, மனோகரன், புனிதா, பொருளாளர் சரவணன், ஒன்றியச் செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பெரியதுரை ராமச்சந்திரன்,

நகரக் கழகச் செயலாளர் பிரகாஷ் அந்தோணிசாமி, பேரூர்ச் செயலாளர்கள் ரூபி பாலசுப்ரமணியம், மாரிமுத்து, நகரமன்றத் தலைவர் உமா மகேஸ்வரி, அணி அமைப்பாளர்கள் மாரியப்பன், சந்திரன், உதயகுமார், அப்பாஸ், முகேஷ், அணி துணை அமைப்பாளர்கள் சரவணன், ராஜ், வழக்கறிஞர் கண்ணன், ஜெயக்குமார், சதீஷ், நகர அவைத்தலைவர் முப்புடாதி, சையது அலி உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.8.2023) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள 9 கோட்டங்களுக்கு 9 DGPS (Digital Global Positioning System) கருவிகளையும், 214 கையடக்க GPS கருவிகளையும் நீர்வளத்துறை திட்ட உருவாக்கப் பொறியாளர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 5 பொறியாளர்களுக்கு அக்கருவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அ.முத்தையா, நீர்வளத்துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் தலைமைப் பொறியாளர் க.பொன்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தனது பிறந்தநாளையொட்டி நேற்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

## மீனவர்களை உடனடியாக மீட்டு தாயகம் அழைத்துவர நடவடிக்கை எடுத்திடுக!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, ஆக.9-

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக மீட்டு, தாயகம் அழைத்து வரத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் 07.8.2023 அன்று கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை சிறையில் வாடும் மீனவர்களை மீட்டு, தாயகம் அழைத்துவரத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவது மிகுந்த கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், INDTN 06MM948 பதிவு எண் கொண்ட படகில் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இந்த ஆண்டு மட்டும் இது வரை 93 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 14 படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 30 நாட்களில் மட்டும், 3 வெவ்வேறு சம்பவங்களில், 34 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள், பல தலைமுறையாக மீனவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, அவர்களுக்கான வாழ்வாதாரத்தையும் வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப் படுவதும், மீனவ மக்களுக்கு பெரும் துன்பத்தையும், துயரத்தையும் அளிப்பதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிறையில் வாடும் 19 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்து, அவர்களை தாயகம் அழைத்து வரத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களை பாதிக்கும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினை காண வேண்டுமென்றும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை வலியுறுத்தியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தலையீடும், ஆதரவும், இந்தப் பிரச்சினையை விரைவாகத் தீர்த்து, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் பெரும் நிம்மதியைத் தரும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னையில் "வீராவேசம்" செய்யும் அன்புமணி ராமதாஸ்

## டெல்லியில் கைகட்டி நின்று ஒன்றிய அரசுக்கு அடிமையாக இருப்பது ஏன்?

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கண்டனம்!

சென்னை, ஆக.9-

"சென்னையில் 'வீராவேசம்' செய்யும் அன்புமணி ராமதாஸ் டெல்லியில் கைகட்டி நின்று ஒன்றிய அரசுக்கு அடிமையாக இருப்பது ஏன்?" என்று அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

"என்.எல்.சி. விரிவாக்கத் திட்டத்தை கைவிடும் எண்ணம் இல்லை" என ஒன்றிய நிலக்கரித்துறை அமைச்சர் பிரகலாத் ஜோசி மாநிலங்களவையில் அறிவித்திருக்கிறார். அதுவும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. கேட்ட கேள்விக்கு அவ்வாறு எழுத்துப்பூர்வமான பதிலை தெரிவித்துள்ளார்.

என்.எல்.சி. விவகாரத்தைப் பொறுத்தவரை, அந்த உழவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை அதிகரிப்பதாக இருக்கட்டும், உள்ளூர் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதாக இருக்கட்டும், அனைத்திலும் எதிர்க்கட்சியாக இருந்தபோது ஆணித்தரமாகக் குரல் எழுப்பியது திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இப்போது ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, என்.எல்.சி. நிர்வாகத்துடன், ஒன்றிய அமைச்சர்களுடன் பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி, இழப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கொடுக்க வைத்ததும் கழக அரசுதான். கடந்த காலங்களில் வழங்கப்பட்ட இழப்பீட்டை விட அதிகமாக இழப்பீடு வழங்கியது மட்டுமன்றி, ஏற்கனவே இழப்பீடு பெற்றவர்களுக்குக் கூட மேலும் கூடுதல் தொகை பெற்றுத் தந்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். எங்களின் தளபதி முதலமைச்சர்தான்.

இன்னும் கூட, உழவர்களின் உரிமைகளுக்காக, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திட வேண்டும் என்று அந்த மாவட்டத்தின் அமைச்சர் என்ற முறையில் முன்னின்று, உழவர்களுடன் அவர்களின் நலன்களுக்காக பேச்சுவார்த்தை நடத்தி, இந்த அரசின் நடவடிக்கைகள் மீதும், எங்கள் கழகத் தலைவரான முதலமைச்சர் மீதும் உழவர்கள், இளைஞர்கள் நம்பிக்கையாக இருக்கிறார்கள்.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அன்புமணி ராமதாஸ் போராட்டம் என்ற பெயரில் போலீசார் மீது கல்வீசி, பொதுச் சொத்துகளை வழக்கம் போல் சேதப்படுத்தி, அமைதியாக இருக்கும் உழவர்களை மக்களைத் தூண்டிவிட்டு இந்த அரசுக்கு எதிராக ஒரு சதித் திட்டத்தை உருவாக்கி வருகிறார்.



வட மாவட்டங்களில் உள்ள உழவர்கள், மக்களுக்குக் கிடைக்கும் மின்சாரத்தைத் துண்டித்து, எப்படியாவது இந்த மாவட்டங்களை, மாவட்டங்களின் முன்னேற்றத்தை இருட்டில் தள்ளி விட முடியாதா என்று துடிக்கிறார்.

ஒரிடத்தில், "மண்ணையும் மக்களையும் காக்க எந்த எல்லைக்கும் செல்வோம்" எனவும், இன்னொரு இடத்தில், "நாங்கள் டெல்லி அளவில் மட்டுமே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருக்கிறோம். தமிழ்நாட்டில் இல்லை" என்றும் நாடகமாடுவது என்பதைக் கைவந்த கலையாக செய்து வருகிறார் அன்புமணி ராமதாஸ்.

சென்னையில் "வீராவேசம்" செய்யும் அன்புமணி ராமதாஸ், டெல்லியில் கைகட்டி நின்று ஒன்றிய அரசுக்கு அடிமையாக இருப்பது ஏன்? டெல்லி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மருத்துவக் கல்லூரி வழக்கா? அல்லது அந்த நிலுவையில் உள்ள வழக்கை வைத்து அமலாக்கத்துறை கைது செய்துவிடப் போகிறது என்ற கலக்கமா?

இங்கே "மண்ணையும், மக்களையும் காப்போம்" என்றவர் டெல்லியில் முகத்திற்கு நேராக, "என்.எல்.சி. விரிவாக்கத் திட்டத்தைக் கைவிடமாட்டோம்" என்று ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர், அதுவும் அன்புமணி ராமதாசே விரும்பி இடம்பெற்றுள்ள "டெல்லி தேசிய ஜனநாயகக் கூட்டணியின்" அமைச்சர் அறிவித்த பிறகும், ஏன் எழுத்துப்பூர்வமாக மாநிலங்களவையில் தெரிவித்த பிறகும், பெட்டிப் பாம்பு போல் அடங்கி கிடப்பது ஏன்?

தைரியம் இருந்திருந்தால், அவர் சென்னையில் பேசுவதும் போராடுவதும் உண்மையென்றால், குறைந்தபட்சம் மாநிலங்களவையில் இருந்து வெளிநடப்பாவது செய்திருக்க வேண்டாமா? அதிகபட்சமாக "இனி நாங்கள் டெல்லி அளவில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியிலும் இல்லை" என்று அறிவித்து விட்டு விமானம் ஏறிச் சென்னைக்கு வந்திருக்க வேண்டாமா?

அப்படியெல்லாம் அன்புமணி ராமதாஸ் அவசரப்படமாட்டார் என்று எங்களுக்கு தெரியும். ஏனென்றால் அப்படி அவசரப்பட்டால் மருத்துவக் கல்லூரி முறைகேடு வழக்கில் அமலாக்கத் துறை வந்து தன் வீட்டுக் கதவை தட்டும் என்பது அவருக்குத் தெரியும்.

அதனால்தான் மாநிலங்களவையில் ஒன்றிய அமைச்சர் "கைவிரித்தும்" இவரால் அது பற்றி கைதூக்கி கேள்வி எழுப்ப முடியாமல் அமைதியாகி விட்டார். ஆகவே திருவாளர் அன்புமணி ராமதாஸ் அவர்களே, வட மாவட்ட மக்களின் நலனுக்கும், உழவர்களின் உரிமைகளுக்காகவும் எங்கள் முதலமைச்சர் அவர்கள் ஓயாது உழைக்கிறார். ஒன்றிய அரசுடன் போராடி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இன்னும் மாநில அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த மண்ணையும், மக்களையும் காக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பார் என்று நம்பியிருக்கும் உழவர்களை, வட மாவட்ட மக்களை உங்களின் இது போன்ற "கபட நாடகங்கள்" மூலம் திசைதிருப்பி விட முடியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.